அதேபோன்று இன்றையதினம் நீதிமன்றங்களிலே இருக்கின்ற நீதிமன்ற நடுவர்கள் தங்களுடைய பணிகளைச் செம்மையான முறையிலே செய்வதற்கு அங்கேயிருக்கின்ற நீதிமன்றங்களில், குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களிலே பெரும்பாலான நீதிமன்றங்களில் அங்கே டேபிள், சேர், அங்கேயிருக்கின்ற அக்காமடேஷன், சிட்டிங் வசதிகள் இல்லாத நிலையிருக்கின்ற காரணத்தினால், குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் மன்னார்குடி நீதிமன்றத்தைப் பொறுத்த அளவில் அங்கே போர்வெல் இருக்கிறது. ஆனால் அதற்கு இருக்கின்ற பம்ப்செட் ரிப்பேர் ஆகி கிட்டதட்ட ஐந்தாண்டுக் காலமாகச் சொல்லியும் அது செப்பனிடப்படாமல் இருக்கின்ற காரணத்தினால் அங்கே கழிப்பிட வசதிகள் இல்லாமல் மிகவும் பெருந்தொல்லையாக இருக்கிறது.

பிற்பகல் 12-50

ஆகவே, அதை நிறைவேற்றித் தரவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், இன்றையதினம் தஞ்சை மாவட்டம் இரண்டாக—புரட்சித் தலைவி, ஒப்பற்ற தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இரண்டாகப் பிரிக்கப்பட்டு, நாகை காயிதே மில்லத் மாவட்டமாகப் பிரிக்கப்பட்டு, இன்றைய தினம் தஞ்சை, நாகை காயிதே மில்லத் என்று இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையிலே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 3 சப்-கோர்ட்டுகள்—சார்பு நீதிமன்றங்கள் இருக்கின்றன, நாகை காயிதேமில்லத் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இரண்டு சார்பு நீதிமன்றங்கள், அதாவது 'சப்-கோர்ட்டுகள்' இருக்கின்றன. ஒன்று மயிலாடுதுறையிலும் ஒன்று நாகைப்பட்டினத்திலும் இருக்கிறது இங்கே நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் என்னவென்றால் இன்றைய தினம் பிரிக்கப்பட்டிருக்கிற இரண்டு மாவட்டத்தில், தஞ்சை மாவட்டத்தைவிட, நாகை காயிதே மில்லத் மாவட்டம் ஜனத்தொகை அடிப்படையிலும், நிதாகுதிநிலை அடிப்படையிலும், ஒன்றியங்கள் அடிப்படையிலும் அதிகப் பகுதிகளைக் கொண்டிருக்கிறது

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

6. காவல்துறையினரால் தேடப்படுவதாகக் குறிப்பிடப்பட்டு வரும் உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன், அவைக்கு வந்துள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. வி. இராஜேந்திரன், காவல்துறையினரால் தேடப்பட்டு வருவதாக எனக்கு . . . . (குறுக்கீடு) திரு. பி. வி. இராஜேந்திரன் உட்கார வேண்டும்; இந்த முறையில் அவர் நடக்கிறபோது. திரு. பி. வி. இராஜேந்திரன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு) என்னுடைய இருக்கை அருகே வந்து முறைகேடாக நடந்து கொள்வது முறையல்ல. நீங்கள் அவைக்கு வந்திருக்கிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு)

காவல் துறையினரால் தேடப்படுவதாகக் குறிப்பிடப்பட்டு வரும் உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன் அவைக்கு வந்துள்ளது குறித்து.

[பேரவைத் தலைவர்]

திரு. பி. வி. இராஜேந்திரன், காவல் துறையினரால் தேடப்பட்டு வருவதாக நேற்றையதினம் காவல்துறை ஆணையாளரிடமிருந்து எனக்குத் தகவல் தரப்பட்டு இருந்ததை நான் பேரவைக்கு அறிவித்திருந்தேன். பல்வேறு முறைகளில் அவர் தேடப்படுவதாகவும், அவர் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்திருந்தார்கள். காவல்துறையினர் ஒருவரைத் தேடுகிறார்கள் என்று சொன்னால், ஒரு நல்ல குடிமகன்---The best citizen-- என்ன செய்ய வேண்டுமென்று சொன்னால், 'தேடுகிறார்கள்' என்று தெரிந்தவுடன், காவல் நிலையத்திற்குச் செல்வதுதான் நாட்டின் நல்ல குடிமகன் என்பதற்கு அர்த்தமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் அதை விடுத்து, தன்னைத் தேடவில்லை என்றும் கூற முடியாது. உயர்நீதி மன்றத்தில் முன் ஜாமீன் கேட்டு மனுச் செய்திருக்கிறார். இன்று காலை அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாக அந்தத் தகவலும் வந்திருக்கிறது. அதன் பின்னர் ஒரு நல்ல குடிமகன் எந்தக் காவல் நிலையத்திலேயிருந்து தேடினார்களோ அந்தக் காவல் நிலையத்திற்குச் செல்வதுதான் ஒரு நல்ல குடிமகனாக இருக்க முடியும். வேறு ஏதேனும் ஒரு வகையில், தனக்குப் பாதுகாப்புத் தேடுவதற்கு வேறு வேறு வழிமுறைகளைத் தேடுவது என்பது முறையல்ல. என்னுடைய இருக்கை அருகே வந்து அவர் முரண்பாடாகப் பேசிக்கொண்டிருந்ததும் முறைகேடான செயல் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர், காவல் துறையினரால் தேடப்பட்டுக் கொண்டிருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. நல்ல குடிமகனாக அவர் நடந்து கொள்வது நல்லது.

5. மானியக் கோரிக்கைகள், 1993–94.

விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. சீனிவாசன், தொடர்ந்து பேசுங்கள்.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை–காயிதே மில்லத் மாவட்டம், தஞ்சை மாவட்டத்தைவிட அளவிலே பெரியதாகவும், ஜனத்தொகை அதிகமாகக் கொண்ட மாவட்டமாகவும், தொகுதிகளை அதிகமாக உள்ளடக்கிக் கொண்டிருப்பதாகவும் உள்ளதால், அதே நேரத்தில், ஒன்றியங்களும் தஞ்சை மாவட்டத்தைவிட அதிகமாக நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திலே அடங்கி இருக்கிற காரணத்தினாலும், தஞ்சைக்கு 3 சப்–கோர்ட்டுகள் இருக்கிறதைப் போல, நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திலும் 3 சப்–கோர்ட்டுகள் அமைய வேண்டும்; அப்படி மூன்றாவதாக

[திரு. கு. சீனிவாசன்]

அமைக்கின்ற சப்–கோர்ட், மன்னார்குடியிலே அமைக்கப்பட வேண்டுமென்கிற கோரிக்கையை முறையாக அரசுக்கும், உயர்நீதிமன்றத்திற்கும் நாங்கள் அனுப்பியிருக்கிறோம்.

6. காவல் துறையினரால் தேடப்படுவதாகக்குறிப்பிடப்பட்டுவரும் உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன், அவைக்கு வந்துள்ளது குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. வி. இராஜேந்திரன் என்னிடத்திலே வந்து கேட்டது, உடனடியாக ஒரு தன்னிலை விளக்கம், தான் இப்போது செய்ய வேண்டுமென்று அவர் கேட்டார். அதற்குப்பேரவை விதிகளில், விதி 109–ல் இடம் இருக்கிறது; With the permission of the Spesker என்று இருக்கிறது. எந்த அளவுக்கு அதற்கு 'பெர்மிஷன்' கொடுக்க முடியும் என்று கேட்டால், "The Forum of the House should not, however, be used to make Personal Explanation to contradict or clarify Report not connected with the Proceedings of the House published in the Press பத்திரிகைகளிலேயும், வெளியிலேயும் வந்த சில செய்திகளை மறுப்பதற்காக அல்லது வேறுவிதமான விளக்கம் சொல்வதற்காக, Personal Explanation தான், தன்னிலை விளக்கம் பேரவையிலே தரவேண்டுமென்று கேட்கலாகாது என்று இருக்கிறது. அதனால் நான் அனுமதி மறுக்கிறேன் என்று சொன்னதற்குப் பின்னாலும், என்னோடு சிறிது நேரம் இந்த இடத்திலே வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார். அதன்பிறகு உட்காரச் சொன்னேன். உட்காராமல் வெளியே போய் விட்டார். இதுதான் இப்போது பேரவையிலே நடந்த செய்தி.

பிற்பகல் 12–55

* திரு. கா. ப. பட்டாபிராமன் : Point of order. விதி 109–இல் கூட ஒரு வாதப் பிரதிவாதம் உள்ள பொருள்களைப் பற்றி இங்கே எழுப்பக் கூடாது என்று விளக்கமாக இருக்கிறது. The matter should not be a debatable one இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டிலே வாத, பிரதிவாதங்கள் இருக்கின்ற காரணத்தினாலே அந்தத் துறையிலே கூட விதி 109 மிகத் தெளிவாகவே இருக்கிறதென்பதை அவையினுடைய நினைவிற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு மேலும் "Personal Explanation is made before the main business of the day is taken up, unless the member in question was permitted by the

Speaker" என்றே இருக்கிறது. நம்முடைய பேரவையினுடைய நடவடிக்கை தொடங்குவதற்கு முன்னர் தலைவருடைய அனுமதி கிடைத்தால்தான் தன்னிலை விளக்கம் தரலாம் என்று இருக்கிறது. அந்த வகையிலேயும் நான் அவரை அனுமதிக்கவில்லை. அவர் இருக்கையிலே போய் உட்காருமாறு சொன்னேன் கொஞ்ச தூரம் போய்விட்டு அப்படியே போய் விட்டார். எந்த அளவுக்கு உறுப்பினர் விதிகளை மதிக்கிற, சட்டத்தை மதிக்கிற பிரஜை என்பதை இதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். திரு. கு. சீனிவாசன் தொடரலாம்.

5. மானியக் கோரிக்கைகள், 1993—94.

விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்சொன்ன காரணங்களினால் மன்னார்குடி தொகுதியில் ஒரு சப்—கோர்ட் அமைப்பதற்கான நடவடிக்கையினை மாண்புமிகு சட்டத் துறை பொறுப்பு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இங்கே என்னுடைய வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன். அதே நேரத்தில் மன்னார்குடி தொகுதியில் ஒரு கூடுதல் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் வேண்டுமென்று நாங்கள் வைத்த கோரிக்கையை உயர் நீதி மன்றத்திற்கு நாங்கள் அனுப்பி இருக்கும் மனுவின் பேரில் உயர் நீதி மன்றத்திலே இருந்து அரசுக்கு, அங்கே ஒரு கூடுதல் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கலாம் என்ற பரிந்துரையை அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. அந்தப் பரிந்துரையை ஏற்று, எங்கள் மன்னார்குடி நகரத்தில் கூடுதல் குற்றவியல் நடுவர் நீதி மன்றம் அமைத்துத் தர வேண்டுமென்ற எங்களுடைய கோரிக்கையை இங்கே வைக்க விரும்புகின்றேன்.

அதே நேரத்தில் இங்கே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சட்டத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கின்ற வேளையில், எனக்கு இன்றையதினம் தான் பேச வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்ற காரணத்தினால் கல்வித் துறையிலும் என்னுடைய கோரிக்கைளைச் சொல்லி அவர் முன் வைக்க விரும்புகின்றேன்.

மன்னார்குடி தொகுதியைப் பொறுத்த வரையில் அங்கே இருக்கின்ற பெண்கள் உயர்நிலைப் பள்ளி, கட்டிட வசதி இல்லாமல் கீற்றுக் கொட்டகையிலே 5, 6 ஆண்டு காலத்திற்கு முன்பு தொடங்கப் பட்டு, நடை பெற்று வருகின்றது